2010 ஏப்ரல் 5]

திருவள்ளூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதும், உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படி இந்த அரசு நடக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

### பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***63070—திரு. பெ. காமராஜ்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

*(அ) கரூர் மாவட்டத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

*(ஆ) மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், உயர் கல்வித் துறை, பக்கம் 21-ல், 'மத்திய அரசு நிதியுதவியுடன் 7 புதிய பலதொழில்நுட்பக் கல்லூரிகள் வரும் கல்வியாண்டில் தொடங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியோ, கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ,

பொறியியல் கல்லூரியோ எதுவுமே இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு, 15-க்கும் மேற்பட்ட மேல்நிலைக் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் தாங்கள் உயர் கல்வி பெற வேண்டுமானால், 60 கிலோ மீட்டர் தூரமுள்ள திருச்சிக்கும், கரூருக்கும், 70 கிலோ மீட்டர் தூரமுள்ள திண்டுக்கல்லிற்கும்தான் செல்ல வேண்டும். கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் பகுதியாக கடவூர் வட்டம் இருக்கின்ற காரணத்தினால் தங்கள் குழந்தைகளை வெளியூருக்கு அனுப்பாமல் பள்ளிக் கல்வியோடு அவர்களை நிறுத்திவிடுகின்றார்கள். மேலும் 1957-ல் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் வென்ற குளித்தலை தொகுதியின் ஒரு பகுதிதான் இன்றைய கிருஷ்ணராயபுரம் தொகுதி என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தலைப்பிள்ளையான குளித்தலைக்குக் கல்லூரி அளித்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கடைசிப் பிள்ளையான கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அளிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தையே தனது குடும்பமாகக் கருதி மக்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபடுகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி அமைந்துள்ள கரூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஏதும் செயல்படவில்லை. ஆனால், தனியார் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இரண்டு அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த இரண்டு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலேகூட இப்போது 840 மாணவர்கள் படித்து வருகிறார்கள். அதில் 199 இடங்கள் காலியாக இருக்கின்றன. இருந்தாலுங்கூட, மத்திய அரசு பின்தங்கிய பகுதிகளில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் துவக்குவதற்கான நிதி உதவியை வழங்கும் என்ற அறிவிப்பிற்கிணங்க தமிழகத்தில் விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர், திருவாரூர், கரூர், தேனி, தருமபுரி ஆகிய 7 மாவட்டங்களிலும், வேலூர் மாவட்டத்தில் ஓர் அரசு

2010 ஏப்ரல் 5]

பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் துவங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. இதற்கான மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியையும், அவர்களுடைய உத்தரவையும் தமிழக அரசு எதிர்நோக்கியிருக்கிறது. அது பெறப்பட்டவுடன் நிச்சயமாக கரூர் மாவட்டத்திலே இந்தப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி உருவாக்கப்படும். அது எந்தத் தொகுதியில் என்பதை முதல்வரோடு கலந்து பேசி முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கல்லூரியும் இல்லாத கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து எங்கள் பகுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று இந்தச் சூழ்நிலையிலே கேட்டுக்கொண்டு, தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து அந்தக் கல்லூரி துவங்கப்பட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கல்லூரிகள் இல்லாத பகுதிகளைத்தான் மத்திய அரசுகூட தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆகவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலே எந்தக் கலைக் கல்லூரியும் இல்லை. அதற்கு முன்னுரிமை அளித்து, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலே கலைக் கல்லூரி மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுதான் திருவண்ணாமலை மாவட்டத்திலே ஆரணி பகுதியிலே ஒரு புதிய அண்ணா பொறியியல் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கலசப்பாக்கம் தொகுதியிலே அந்தப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அப்பகுதியிலே வேறு கல்லூரிகள் இல்லாமல் இருக்குமானால், நான் முன்பே சொன்னதைப்போல அந்தத் தொகுதியிலே இதைத் துவக்குவது குறித்து முதல்வர் அவர்களோடு கலந்து பேசி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மத்திய அரசாங்கத்தின் உதவியோடு 27 புதிய கல்லூரிகள் துவக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மத்திய அரசின் உதவி பெறப்பட்டிருக்கிறதா? அப்படிப் பெறப்பட்டிருந்தால் வடஎல்லையில் கடைக்கோடியில் இருக்கின்ற எங்களுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே ஓர் அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கோரிக்கை விடுத்து, இப்போதைய நிலை என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு 27 இடங்களைக் குறித்த பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான அவர்களுடைய அனுமதியும், நிதியுதவியும் பெறப்பட்டவுடன் உடனடியாக அந்தக் கல்லூரிகள் துவங்கப்படுகின்ற பணி துவங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் வேலூர் மாவட்டம். அந்த

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 5]

வேலூர் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிற காரணத்தினாலே, திருப்பத்தூர் கல்வி மாவட்டம், வேலூர் கல்வி மாவட்டம் என்று இரண்டு கல்வி மாவட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திலே ஓர் அரசுக் கல்லூரிகூட இல்லை. பொறியியல் கல்லூரி கிடையாது. அதேபோல பாலிடெக்னிக் கல்லூரியும் கிடையாது. எந்த ஒரு அரசாங்கக் கல்லூரியும் இல்லாத காரணத்தினாலே, கால் நூற்றாண்டு காலமாக நாங்களும் கோரிக்கை வைத்து, கடந்த ஆண்டு எங்களுடைய மாவட்ட அமைச்சர்—சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு கலைக் கல்லூரியைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதற்காக இடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஏனோ எங்கள் தொகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து இந்த ஆண்டிலாவது ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், ஒரு கலைக் கல்லூரியும் வழங்க தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு தொகுதியையும் புறக்கணிக்க வேண்டுமென்பது இந்த அரசினுடைய நோக்கம் அல்ல. ஒவ்வொரு தொகுதியிலேயும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் இதுபோன்ற அரசுக் கலைக் கல்லூரிகளையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும், அண்ணா பொறியியல் கல்லூரிகளையும் இந்த அரசு அமைந்த ஐந்தாண்டுகளில் அதிகமாகவே உருவாக்கி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக வேலூர் மாவட்டத்தில்தான் அரசு பொறியியல் கல்லூரிகள் ஆறு இருந்தபோதே, அங்கே கூடுதலாக ஒன்று தொடங்கப்பட்டது. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனியார் கல்லூரிகளும் நிறைய இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் அவர்கள் சொல்லுகின்ற அந்த மாவட்டத்தில் அவருடைய தொகுதியில் கல்லூரிகள் இல்லாமல் இருக்குமானால் அது குறித்தும்—மத்திய அரசினுடைய 27 கல்லூரிகளை எந்தெந்தப் பகுதிகளில் அமைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அவை விவாதிக்கப்படும். உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு

அமைச்சர்களும், நிதி கொடுக்கிறோம், இடம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அவையெல்லாம் ஏற்பாடு செய்யப்படுமானால், அதையும் பரிசீலிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இடம் தந்து அனுமதி கொடுத்தால் நானும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் அரசுக்குக் கட்ட வேண்டிய தொகைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு கட்டுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று இந்த அவையிலே சொன்னோம். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் எங்களோடு தொடர்பு கொள்ளவில்லை. அவர் வேறு பக்கம் போய்விட்டார், நாம் வேறு பக்கம் போய்விட்டோம். எங்கே போய் சொல்வது? *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கும் முதலாவதாக எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறபோது மத்திய அரசால் 27 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். குறிப்பாக இந்த அவையிலே தொடர்ந்து எழுப்பப்படுகிற கேள்வி, பல சட்டமன்றத் தொகுதிகளிலே கலைக் கல்லூரிகளோ, பொறியியல் கல்லூரிகளோ இல்லையென்று கோரிக்கை வைக்கப்படுகிறது. அதன் அடிப்படையிலே அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? எத்தனை தொகுதிகள் கல்லூரிகளே இல்லாத தொகுதிகளாக இருக்கின்றன என்ற அந்தப் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா? அப்படிப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிற அந்த 27 கல்லூரிகளுக்குரிய இடங்களின் பெயர்கள் அடங்கியிருக்கிற தொகுதிகள் என்னவென்பதையும் இந்த அவையிலே அறிவிப்பார்களா என அறிய விரும்புவதோடு, தொடர்ந்து எங்களது திருவாரூர் மாவட்டத்திலே, திருத்துறைப்பூண்டியிலே எந்தவிதமான கல்லூரிகளும் இல்லை என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மக்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகை என்பது அங்கு செலுத்த இயலாத சூழல். காரணம் விவசாயம் மற்றும் விவசாயம்

சார்ந்த தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. சாதாரண தலித் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே ஒரு கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்பது சட்டமன்ற உறுப்பினருடைய நீண்ட நாள் கோரிக்கை. ஆகவே அந்தப் பட்டியலிலே திருத்துறைப்பூண்டி இணைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மிகவும் நன்றிக் கடப்பாடு உடையவர். ஏனென்றால், திருவாரூர் மாவட்டத்தில்தான் முதன்முதலாக ஒரு மத்திய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில்தான் ஒரு மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டிருக்கிறது. திருவாரூரிலேயே அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய ஒரு பொறியியல் கல்லூரி உருவாக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலே வேறு எந்த மாவட்டமும் கலைஞர் ஆட்சியிலே, திருவாரூர் மாவட்டம்போல கல்வித் துறையிலே சிறப்புப் பெற்றதாக வரலாறே கிடையாது. அவ்வளவும் கலைஞர் செய்து கொடுத்திருக்கிறார். ஆக, மத்திய அரசாங்கத்தினுடைய மத்திய பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டிருக்கிற அந்தப் பகுதியில்—மேலும் நீங்கள் கேட்ட 27 இடங்கள்—பொதுவாக இன்று 67 கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலே 7 B.Ed., 60 கலைக் கல்லூரிகள். கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களிலேதான் அவர்களாகவே தெரிவு செய்து, இன்னின்ன இடங்களில் நீங்கள் அறிவிக்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக ஒரு குழுவையும் மத்திய அரசாங்கம் நியமித்திருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் நாமும் பரிந்துரை செய்திருக்கிறோம். ஆகவே உங்கள் மாவட்டத்தில் உண்மையிலேயே பின்தங்கிய நிலைமை இருக்குமானால்—திருவாரூரிலே ஏற்கெனவே ஓர் அரசுக் கலைக் கல்லூரியும் இருக்கிறது. ஆகவே உங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், அது உண்மையிலேயே பின்தங்கிய தொகுதியாக இருக்குமானால் மத்திய அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரக்

கணக்கின்படியும், மாநில அரசினுடைய கணக்கின்படியும், வருங்காலங்களிலே அது குறித்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

**பணிமனை**

***52596—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாரில் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆழியார் பகுதியிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொள்ளாச்சியில் மூன்று பணிமனைகளும், ஆழியாரிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வால்பாறையில் ஒரு பணிமனையும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மேலும் இப்பணிமனைகளில் கூடுதலாகப் பேருந்துளைப் பராமரித்து இயக்கவும் போதுமான இட வசதி உள்ளது. ஆதலால் ஆழியாரில் கூடுதல் பணிமனை கட்டும் திட்டம் தற்போது இல்லை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், ஒலிபெருக்கியின் பட்டனை நன்றாக அழுத்துங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பேரவையில் முதலில் பதிலளித்த நான்கு அமைச்சர்களும் "செய்து தருகிறோம்; பரிசீலனை